

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 16

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: நஜாஷியிடம் முஸ்லிம்கள் தங்கள் தரப்பு நியாயத்தை முறையிடல்
- பகுதி 2: ஜாஃபர் (ரலி) அவர்களின் திறன்மிக்க உரையும், ஸூரா மர்யம் வசனங்களை ஓதிக்காட்டியதும்
- பகுதி 3: குரைஷிகள் மீண்டும் நஜாஷியை அணுகியது
- பகுதி 4: மன்னர் நஜாஷி சந்தித்த சிக்கல்கள்
- பகுதி 5: நஜாஷி பற்றிய மேலும் சில தகவல்கள்

## பகுதி 1: நஜாஷியிடம் முஸ்லிம்கள் தங்கள் தரப்பு நியாயத்தை முறையிடல்

- ஜாஃபர் இப்னு அபிதாலிப் (ரலி) தலைமையிலுள்ள முஸ்லிம்கள், தங்கள் நிலையை விளக்குவதற்காக, அபிசீனியா அரசரான நஜாஷி அவர்களால் அரண்மனைக்கு அழைக்கப்பட்டனர். இதை அறிந்த குரைஷியர்கள் சார்பாக வந்த அம்ர் இப்னு அல்ஆஸ், தன்னுடைய திட்டம் வெற்றி பெறும் என்றும், முஸ்லிம்கள் விரைவில் வெளியேற்றப்படுவார்கள் என்றும் நம்பினார்.



- முஸ்லிம்கள் பதற்றத்துடன் இருந்தனர். ஒரு தவறான பேச்சு அல்லது செயல் அபிசீனியாவில் அமைதியாக வாழ்வதற்கோ அல்லது குரைஷிகளின் கொடூரமான துன்புறுத்தலுக்கோ வழிவகுக்கும்.

- ஜாஃபர் (ரலி) தன் தோழர்களிடம் கூறினார்: ‘‘நபி (ஸல்) கூறியதை மட்டுமே நாம் சொல்வோம். உண்மையைச் சொல்வோம்.’’

- மறுநாள் அரண்மனைக்கு வந்த முஸ்லிம்கள், மன்னர் நஜாஷி அவரது மந்திரிகளுடன் இருப்பதைக் கண்டனர்.

- நுழைவாயிலின் ஒரு பக்கத்தில் அம்ர் இப்னு அல்ஆஸ் மற்றும் அவருடன் வந்தவர்கள் நின்றனர். மறுபக்கம் முஸ்லிம்கள் நின்றனர்.

- அம்ர் இப்னு அல்ஆஸ் மற்றும் அவருடன் வந்தவர்கள் முதலில் அவையில்

நுழைந்து, அக்கால வழக்கப்படி நஜாஷிக்கு ஸஜ்தா செய்தனர்.

- ஜாஃபர் (ரலி) மற்றும் அவருடன் இருந்த முஸ்லிம்கள் நேராக நடந்து, ஸஜ்தா செய்யாமல் உள்ளே நுழைந்தனர். அப்போது அங்கிருந்த மந்திரிகள், ''உங்களுக்கு எவ்வளவு துணிவிருந்தால், மன்னரை வணங்காமல் இப்படி உள்ளே நுழைகிறீர்கள்?'' என்று கோபத்துடன் கேட்டனர்.

- ஜாஃபர் (ரலி) பதிலளித்தார்: ''எங்கள் நபி (ஸல்) கூறியது, 'அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் ஸஜ்தா செய்யக் கூடாது'. இதுதான் எங்கள் மார்க்கம்.''

- இதைக்கேட்ட நஜாஷி, ''நீங்கள் கண்டுபிடித்த இந்தப் புதிய மார்க்கம் என்ன? உங்கள் மக்களின் மதத்தை ஏன் விட்டுவிட்டீர்கள்? என் மதத்தையோ, உலகிலுள்ள பிற மதங்களையோ நீங்கள் ஏன் ஏற்கவில்லை?'' என வினவினார்.

## பகுதி 2: ஜாஃபர் (ரலி) அவர்களின் திறன்மிக்க உரையும், ஸூரா மர்யம் வசனங்களை ஓதிக்காட்டியதும்

- ஜாஃபர் (ரலி) அருமையாக பதிலளித்தார்கள். ''மன்னரே! நாங்கள் அறியாமையில் மூழ்கியிருந்தோம்.

- சிலைகளை வணங்கினோம்; இறந்த மாமிசத்தை உண்டோம்; உறவுகளை முறித்தோம்; அன்னியர்களை இழிவாக நடத்தினோம்.



- வலிமைமிக்கவர்கள் பலவீனரைகளை அழித்தார்கள். இந்நிலையில்தான், அல்லாஹ் எங்களுக்கு ஒரு தூதரை அனுப்பினான்''.

- ஜாஃபர் (ரலி) மேலும் கூறினார்கள்: ''எங்கள் நபி (ஸல்) எங்களுக்கு நன்கு அறிமுகமானவர். அவரது வம்சம், நேர்மை எங்களுக்கு நன்கு தெரியும். அவர் எந்தப் பொய்யும் கூறாதவர். அவர் எங்களை ஒரே இறைவனை வணங்கும்படி அழைத்தார். சிலைவழிபாட்டைத் தவிர்க்கவும், மூதாதையரின் அறியாமை வழிகளைக் கைவிடவும், வாக்குறுதிகளை நிறைவேற்றவும், உறவுகளைப் பேணவும் அறிவுறுத்தினார்.

- மேலும் இரத்தம் சிந்தாதிருக்கவும், அந்நியர் பொருளைத் திருடாமலிருக்கவும், அனாதைகளின் சொத்தை அழிக்காதிருக்கவும், விபசாரம் பற்றி பொய்க் குற்றம் சாட்டாதிருக்கவும் அறிவுரை கூறினார். எங்களை தொழுகை, நோன்பை கடைபிடிக்கவும், தர்மம் செய்யும்படியும் கூறினார்.

- எனவே, நாங்கள் அவரை நம்பி ஏற்றுக்கொண்டு அவரை பின்பற்றுகிறோம். அவர் அல்லாஹ்வை மட்டுமே வணங்குகிறார். சிலைகளை வணங்குவதில்லை. நாங்கள் அவர் தடைசெய்ததை தவிர்த்தோம்; அனுமதித்ததை ஏற்றுக்கொண்டோம்.

- ஆனால் எங்கள் மக்கள் இதனை எதிர்த்தனர்; எங்களை சித்திரவதை செய்தனர். எங்களை சிலைகளை வணங்குமாறு வற்புறுத்தினர்.

- அவர்கள் எங்களுக்கு அநீதி இழைத்தார்கள். எங்கள் வாழ்க்கையை அவலப்படுத்தினர். எங்களை இருக்கவிடாமல் தடுத்தனர்.

- எனவே, நாங்கள் உங்கள் நாட்டில் தஞ்சம் புகுந்தோம். எல்லா ஆட்சியாளர்களுக்கும் மேலாக உங்களைத் தேர்ந்தெடுத்தோம். உங்கள் பெருந்தன்மைக்கும், விருந்தோம்பலுக்கும் கீழ் வாழ விரும்புகிறோம். உங்கள் நாட்டில் எங்களுக்கு அநீதி இழைக்கப்படாது என நாங்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளோம்.

- இந்த உரை நஜாஷியின் மனதை உருக்கியது. அவர், ''இந்த நபிக்கு வஹீ ஏதும் வந்ததாக கூறினாரா?'', எனக் கேட்டார்.

- அதற்கு ஜாஃபர் (ரலி) அவர்கள், மர்யம் (அலை) மற்றும் ஈஸா (அலை) ஆகியோரின் சம்பவத்தை விவரிக்கும் ஸூரா மர்யமின் ஆரம்ப சில

வசனங்களை ஓதிக் காட்டினார்கள். (ஸூரா மர்யம், 19: 16-34 ).

- ஜாஃபர் (ரலி) ஓதியபோது, மன்னரின் அவையிலிருந்த அமைச்சர்கள் கண்ணீர் விட்டனர். நஜாஷிக்கு அந்த வசனங்களை மொழிபெயர்த்து கூறியபோது, அவரும் அழுதார்.

- நஜாஷி கூறினார்: ''இறைவன் மீது ஆணையாக! இந்த வேதமும், மூசா, ஈஸா ஆகியோரின் வேதமும் ஒரே மூலத்திலிருந்து வந்தவை.''

- பிறகு அம்ரிடம் திரும்பி, ''இங்கிருந்து போய்விடுங்கள்! இவர்களை நான் உங்களிடம் ஒப்படைக்கப் போவதில்லை'' என்று சொல்லிவிட்டார்.

- எனவே அம்ரும் அவரது தோழர்களும் அவமானத்துடன் நீதிமன்றத்தை விட்டு வெளியேறினர். அம்ர் தன் தோழர்களிடம், ''விரக்தி அடைய வேண்டாம்! இறுதியாக ஒரு தந்திரம் உள்ளது. அதை நாம் நாளை செயல்படுத்துவோம்'', எனக் கிசுகிசுத்தார்.

## பகுதி 3: குரைஷிகள் மீண்டும் நஜாஷியை அணுகியது

- தோல்வியுற்ற அம்ர் மறுநாள் நஜாஷியிடம் சென்று, ''மாண்புமிகு மன்னரே! உங்களிடம் ஒன்றைக் கூற மறந்துவிட்டோம்.

- இந்த மக்கள் உங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஏதோ அவதூறாகச் சொல்கிறார்கள்''.

- இதைக் கேட்ட நஜாஷி, இயேசு கிறிஸ்து பற்றிய முஸ்லிம்களின் நிலைப்பாடு என்ன என்பதை தெரிந்துகொள்ள அவர்களை உடனே வருமாறு செய்தி அனுப்பினார்.

- இப்போது ஸஹாபாக்கள் முன்பை விட அதிகமாக பீதியடைந்தனர்.

- அவர்கள் நஜாஷியிடம் என்ன சொல்ல வேண்டும் என்று தங்களுக்குள் விவாதித்தனர். என்ன நடந்தாலும் தாங்கள் உண்மையைச் சொல்வோம் என்றும், நபி (ஸல்) அவர்கள் மன்னரிடம் கூறச் சொன்னதை மட்டும் சொல்வோம் என்றும் முடிவு செய்தனர்.

- முஸ்லிம்கள் நஜாஷியின் சபைக்கு வந்தனர்.

- அவர்கள், நஜாஷி சற்று எரிச்சலுடன் இருப்பதைக் கண்டார்கள். மன்னர் முஸ்லிம்களிடம், ''நீங்கள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவதூறான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள் என நான் கேள்விப்படுகிறேன். அது உண்மையா?'' எனக் கேட்டார்.

- அதற்கு ஜாஃபர் (ரலி), ''மாண்புமிகு மன்னரே! எங்கள் நபி எங்களுக்குக் கற்றுக் கொடுத்ததை மட்டுமே நாங்கள் சரியாகச் சொல்கிறோம்''.

- ''இயேசு கிறிஸ்து அல்லாஹ்வின் தூதர் ஆவார். அதாவது, அவர் 'அப்த்' அல்லது அல்லாஹ்வின் ஊழியர் என்று எங்கள் நபி (ஸல்) கூறினார்கள்''.



- அல்லாஹ் அவரை ஒரு அற்புதமான பிறப்பின் மூலம், மர்யம் என்ற கன்னிப் பெண்ணின் வழியாக இந்த உலகுக்கு அனுப்பினான். மர்யம் கற்புடைய பெண்ணாகவும், இயேசு கிறிஸ்து ஒரு உண்மையான நபியாகவும் இருந்தார்.

- ஜாஃபர் (ரலி) கூறிய இப்பதிலினால் ஈர்க்கப்பட்ட நஜாஷி மிகவும் திருப்தி அடைந்தார். மேலும், திரித்துவத்தை நம்பாத கிறிஸ்தவர்களில் நஜாஷியும் ஒருவர்.

- அவர் எதிரே இருந்த ஒரு மரக்கிளையிலிருந்து, சிறு குச்சி ஒன்றை எடுத்தார்.

- அவர் ஜாஃபர் (ரலி) முன்வந்து, ''நீங்கள் இப்போது சொன்னது, இயேசு கிறிஸ்து சொன்னதிலிருந்து இந்த குச்சியின் அளவுக்கு மேல் மிகைப்படுத்தவில்லை'' என்று கூறினார். உங்கள் செய்தி இயேசு கிறிஸ்துவின் செய்திதான்.

- பின்னர் மன்னர் நஜாஷி, அம்ர் இப்னு அல்ஆஸ் பக்கம் திரும்பி அவரிடம், ''இங்கிருந்து போய்விடுங்கள். உங்களுடைய எல்லா பரிசுகளையும் உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள்; அவை எனக்குத் தேவையில்லை'', என்று கூறினார்.

- இந்தச் சம்பவத்தைப் பற்றி கூறிய உம்மு ஸலமா (ரலி) அவர்கள், ''அந்த இரண்டு குரைஷித் தூதர்களும், அவமானப்படுத்தப்பட்டு, இழிவுபடுத்தப்பட்டு, தாங்கள் வழங்கிய அனைத்துப் பரிசுகளுடன் திரும்பிச் சென்றுவிட்டனர்'' என கூறி முடித்தார்கள்.

- மேலும் நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்குத் திரும்பும்படி அழைப்பு விடுக்கும் வரை, அங்கிருந்த முஸ்லிம்கள் கண்ணியத்துடனும், மரியாதையுடனும், சிறந்த விருந்தோம்பலுடனும் அபிசீனியாவில் இருக்க அனுமதிக்கப்பட்டனர்.

## பகுதி 4: மன்னர் நஜாஷி சந்தித்த சிக்கல்கள்

- முஸ்லிம்களுக்கு ஆதரவாக நஜாஷி எடுத்த முடிவை, சில அமைச்சர்கள் ஆதரிக்கவில்லை. ஆதலால், அவருக்கு எதிராக அந்த அமைச்சர்கள் ஒரு சதித்திட்டத்தை வகுத்தனர்.

- நஜாஷி இந்த குழப்பத்தைத் தீர்க்க ஒரு நாளை நிர்ணயித்தார். அவர் ஒரு தோல்காகிதத்தில், ''அல்லாஹ்வைத் தவிர, வேறு இறைவன் இல்லை என்றும், இயேசு அல்லாஹ்வின் ஆவி, அல்லாஹ்வின் வார்த்தை மற்றும் அல்லாஹ்வின் அடிமை என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.'' என்று எழுதினார்.

- அவர் அந்தக் காகிதத்தை தனது மேலாடையின் உள்ளே மார்புக்கு அருகில் வைத்துக்கொண்டார்.

- பின்பு அவர் பிரச்சனை செய்த அமைச்சர்களை அழைத்து, ''என்ன விஷயம்? நான் உங்களுக்கு நல்ல அரசனாக இருக்கவில்லையா?'' என்று வினவினார்.

- அதற்கு அவர்கள், ''ஆமாம்! ஆனால் நீங்கள் நமது மதத்தை கைவிட்டு விட்டீர்கள். மேலும் எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத சில புதிய மத நம்பிக்கைகளை நீங்கள் ஆதரிக்கிறீர்கள்'' என்று பதிலளித்தனர்.

- இதைக்கேட்ட நஜாஷி, ''நீங்கள் நமது மதத்தில் எதை நம்புகிறீர்கள்?'' என

வினவினார். அதற்கு அவர்கள், ''இயேசு கிறிஸ்து கடவுளின் மகன்; எங்கள் ஆண்டவரும், இரட்சகரும் ஆவார்; மேலும் திரித்துவத்தின் மூன்றாமவரும் அவரே என்று நாங்கள் நம்புகிறோம்'' என்று பதிலளித்தனர்.

- அதற்கு நஜாஷி, ''இறைவன் மீது ஆணையாக! நான் நம்புவது 'இதுதான்' என்று தனது மார்பை சுட்டிக்காட்டி, இன்னும் துல்லியமாக, அவரது மார்பில் உள்ள காகிதத்தோல் மீது கை வைத்து – ''இது'' என்று அவர் சொன்னார்.

- நஜாஷி தனது நம்பிக்கையைப் பாதுகாக்கும் அதே வேளையில் தனது நிலையை பாதுகாக்கவும், 'தவ்ரியா' அல்லது இரட்டை அர்த்தம் உடைய வார்த்தைச் செயல்களைப் பயன்படுத்தினார். அவர் மிகவும் தேவையான ஒரு நேரத்தில் இதைச் செய்தார் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.



- இந்த நிகழ்வுக்கு முன்னதாக நஜாஷி முஸ்லிம்களுக்கு ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அதில் அவர் தனது பதவிக்கு ஆபத்து இருப்பதாகவும், அவர் எந்நேரமும் படுகொலை செய்யப்படலாம் என்றும் விளக்கியிருந்தார்.

- அவ்வாறு நடந்து தனது இறப்பு செய்தியைக் கேட்டால், முஸ்லிம்கள் தப்பித்துச் செல்வதற்காக ஒரு குறிப்பிட்ட இடத்தில் தனது கப்பல் ஒன்றை ஏற்பாடு செய்திருப்பதாகவும் அவர் தனது செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

## பகுதி 5: நஜாஷி பற்றிய மேலும் சில தகவல்கள்

- நஜாஷி கிறிஸ்தவத்தின் ஆரம்பமான, உண்மையான வடிவத்தை நம்பினார்; அதாவது அல்லாஹ் ஒருவனே! இயேசு ஒரு நபியே! என்பதை நம்பினார். அதனால் முஸ்லிம்கள் மீது கருணையுடன் இருந்தார்.

- நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு குடிபெயர்ந்த பின்பு, நஜாஷிக்கு இஸ்லாத்திற்கு அழைப்பு விடுத்து ஒரு கடிதம் எழுதினார்கள். அதற்கு பதில் எழுதிய நஜாஷி, தான் ஒரு முஸ்லிம் என்பதை உறுதிப்படுத்தி எழுதியிருந்தார். ''அல்லாஹ்வின் தூதரே, தாங்கள் எனக்குக் கட்டளையிட்டால், நான் மதீனாவுக்கு வந்து உங்களுக்கு சேவை செய்யக் காத்திருக்கிறேன்'' என்றும் அதில் கூறியிருந்தார்.

- சில ஆண்டுகளுக்குப் பிறகு, நஜாஷி மரணமடைந்துவிட்டார். அப்போது ஜிப்ரீல் (அலை) அவர்கள் தனக்கு தெரிவித்ததாக நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''உங்கள் சகோதரர் அஸ்ஹமா, நஜாஷி இறந்துவிட்டார்; எனவே, அவருக்காக பிரார்த்தனை செய்யுங்கள்.''

- அபிசீனியாவில் இருந்து வரும் செய்திகள் பொதுவாக மதீனாவை அடைய பல நாட்கள் ஆகும். ஆனால் நபி (ஸல்) அவர்களுக்கு இந்த தகவல் உடனடியாக வழங்கப்பட்டது. அவர்கள் தனது தோழர்களைக் கூட்டி, நேகஸுக்காக 'காயிப் ஜனாஸா' தொழுகையை (ஜனாஸா இல்லாமல் அதற்காக தொழுவது) நடத்தினார்கள். நபி (ஸல்) அவர்கள் செய்த இத்தகைய தொழுகை இது ஒன்றே.

- நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு சென்றபோதிலும், அபிசீனியாவில் இருந்த முஸ்லிம்கள் ஏறக்குறைய 14 ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்தனர். அவர்கள் புகழ்பெற்ற பத்ர், உஹது மற்றும் கந்தக் போர்களில் பங்கேற்கவில்லை. கைபர் போருக்குப் பிறகுதான், நபி (ஸல்) திரும்பி வர அழைப்பு விடுத்தார்கள். அந்நேரத்தில் முஸ்லிம்கள் தங்களது அதிகாரத்தை உறுதியாக நிலைநிறுத்தி இருந்தனர்.